**செ.வெ.எண்:24** **நாள்:16.11.2018**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மக்களுக்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் (டாப்செட்கோ) மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் (டாம்கோ) மூலம் சுயதொழில் செய்வதற்காக தொழிற்கடன் வழங்கும் திட்டம் செயல்படதத்தப்பட்டு வருகிறது. தொழிற்கடன், தனிநபர் கடன், சுயஉதவி குழுக்களுக்கான சிறுகடன், கறவை மாடு வாங்க கடனுதவி பெற விரும்புவர்கள் மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய கல்வியில் சிறந்த சிறுபான்மையின மாணவ / மாணவியர்கள் உயர் கல்வி பயில்வதற்கான கல்வி கடன் பெற விரும்புவர்கள் அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் வட்டம் **தென்னூர்** கிராமத்தில் தென்னூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் 23.11.2018 அன்று காலை 10.00 மணி முதல் நடைபெறவுள்ள டாப்செட்கோ மற்றும் டாம்கோ லோன் மேளாவிலும், அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டம் **குழுமூர்** கிராமத்தில் குழுமூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் 27.11.2018 அன்று காலை 10.00 மணி முதல் நடைபெறவுள்ள டாப்செட்கோ மற்றும் டாம்கோ லோன் மேளாவிலும் விண்ணப்பங்கள் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தகுதிகள் - பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையின மக்கள், வயது - 18 முதல் 60 வயது வரை, வருமானம் வரம்பு - கிராமப்புறமாயின் ஆண்டு வருமானம் ரூ.81,000/-(ரூபாய் எண்பத்தொன்று ஆயிரம் மட்டும்)-க்கு உட்பட்டு இருக்க வேண்டும். நகர்ப்புறமாயின் ரூ.1,03,000/-(ரூபாய் ஒரு இலட்சத்து மூன்றாயிரம் மட்டும்)-க்கு உட்பட்டு இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டும் கடனுதவி வழங்கப்படும்.

மேலும் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விண்ணப்பங்கள் பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**